<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்</u>

<u>நாள். 07.03.2024</u>
<u>O.S.323/2014</u>
<u>வா.சா.1 ஷீலா</u>
<u>பிரதிவாதி தரப்பில் விசாரணை</u>

வா.சா.ஆ.3 என் கணவரின் தாயார் மற்றும் என் கணவரின் சித்தப்பாவிற்கு இடையே ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் ஏ பட்டிகை என் கணவரின் தயார் பெயர் குருசடியாளிற்கு மேற்கு பக்கம் 3 1/4 சென்ட் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பி பட்டிகை கணவரின் சித்தப்பா மிக்கேலுக்கு கிழக்கு பக்கம் 3/4 கொடுக்கப்ட்டது என்றால் சரிதான்.

இரண்டு பட்டிகையிலும் தென் பகுதி தெருவாக உள்ளது என்றால் சரிதான். ஏ பட்டிகையில் கிழக்கு பக்கம் பி பட்டிகை சொத்து என உள்ளது என்றால் சரிதான். பி பட்டிகையில் மேற்கு பக்கம் ஏ பட்டிகை சொத்து என உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 என் மாமியார் என் கணவருக்கு 1.625 சென்ட் செற்றில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.3 ஆவணத்தில் என் மாமியாருக்கு கிடைத்த சொத்தில் கிழக்கு பாகம் வா.சா.ஆ.2 படி என் கணவருக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் சொத்தின் கிழக்கு பக்கம் எல்கை மிக்கேல் சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 என் கணவர் எனக்கு கொடுத்த பவர் பத்திரம் என்றால் சரிதான். அதிலும் சொத்தின் கிழக்கு எல்கை மிக்கேல் சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது.

வா.சா.ஆ.3 பாகபத்திரபடி அவரவர் பாகத்தை பிரித்து அறுதி

செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அதன் பின்புதான் எங்கள் பாகத்தில் நாங்கள் வீடு கட்டினோம் என்றால் சரி. நாங்கள் எங்கள் வீட்டிற்கு தெற்கு பக்கமாக உள்ள கீழ் மேல் தெருவில் சென்று வருகிறோம் என்றால் சரிதான். மிக்கேலும் உயிரோடு இருந்த காலம் அந்த தெற்கு பக்கம் உள்ள கீழ் மேல் தெருவில் சென்று வந்தார் என்றால் சரிதான்.

பிரதிவாதி மிக்கேலிடம் சொத்து வாங்கினார் என்றால் சரிதான். பிரதிவாதியும் அந்த தெற்கு பக்கம் உள்ள கீழ் மேல் தெருவில் புழங்கி வருகிறார் என்றால் ஆம். சாட்சி தற்போது அவர் புழங்கி வரவில்லை என்று சொல்கிறார். பிரதிவாதிக்கு மிக்கேலிடம் வாங்கிய சொத்திற்கு கிழக்கு பக்கமும் பிரதிவாதி குடும்பத்தினருக்கு வேறு ஒரு சொத்து உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கும் எங்களுக்கும் உள்ள வீட்டின் மீட்டர் தெற்கு பக்கம் உள்ள தெருவில் சுவற்றில் உள்ளது என்றால் ஆம்.

வா.சா.ஆ.1, 2 மற்றும் 3 ஆவணங்களில் கிழக்கு பக்கம் முடுக்கு என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் கிழக்கு பக்கம் பாதையை விட்டு வீடு கட்டி இருக்கிறோம். மிக்கேல் தெற்கு பக்கம் போய் வந்து கொண்டிருந்து தற்போது பிரதிவாதி போய் வந்து கொண்டிருக்கும் பகுதியை எங்களுக்கு வேண்டும் என நாங்கள் தவறாக வழக்கு தாக்கல் செய்து உள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையாளர் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான்.

நீதிமன்ற ஆணையாளர் தாலுக் சர்வேயர் உதவியுடன் வழக்கு சொத்தை அளந்தார்கள் என்றால் இல்லை. அவ்வாறு அளந்தார்கள் என்றாலும் எங்கள் சொத்தும் பிரதிவாதி சொத்தும் ஆவணத்தின் படி

சரியாக உள்ளதாக தெரிவித்தார்கள் என்றாலும் அதனால்தான் நான் கமிஷன் தொடர விரும்பவில்லை என முடித்து கொண்டேன் என்றாலம் சரியல்ல. ஆணையாளர் மற்றும் சர்வேயர் அளவையின்படி எனக்கு வழக்கு இல்லை என தெரியவந்ததால் அந்த அறிக்கை நீதிமன்றத்திற்கு தெரிய கூடாது என்று நான் அதனை வலியுறுத்தவில்லை என்றால் சரியல்ல.

என் சொத்தின் முழுவதும் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிழக்கு பக்க சுவரில் மீட்டர், கழிவு நீர் குழாய், மழை நீர் குழாய் உள்ளது. மழை நீர் பாய்வது தெற்கு பக்க தெருவோடு போய் விடும் என்றால் முடுக்கில் வந்து தெருவோடு போய் விடும். வா.சா.ஆ.4 கூட்டுபட்டா என்றால் சரிதான். அதில் வாதி மற்றும் பிரதிவாதி பெயர்கள் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் 1.625 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.10, 11 கரத்தீர்வை ரசீது புல எண் 34/22 ல் இரண்டு ஏர் என்றும் அருகில் பகுதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 மற்றும் 16 வரைபடங்களில் புல எண் 34/22 மொத்தமாக காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. பிரதிவாதி என் பக்கத்தது வீட்டுக்காரர் என்பதால் எங்களுக்கு இடையே ஆன கருத்து வேறுப்பாட்டால் அவரை கஷ்பப்படுத்த வேண்டும் என இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதி என் கணவரின் சித்தப்பா சொத்தை வாங்கியுள்ளதால் ஆதியில் மொத்த சொத்தும் எங்கள் குடும்ப சொத்து என்பதால் பிரதிவாதி எங்களுக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளோம் என்றால் சரில்லை. வழக்கு ஏ பரிகாரம் அவசயமற்றது

என்றால் சரியல்ல. பிரதிவாதி அவர் சொத்தை மட்டும் பயன்படுத்தி வருகிறார் என்றாலும் எங்கள் சொத்தில் அத்துமீறவில்லை என்றலும் ஆகையால் வழக்கு பி பரிகாரம் எங்களக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல.

பிரதிவாதி எங்கள் சொத்தை ஆக்கிரமிக்கிறார் என்றும், எங்கள் சொத்தில் கட்டுமானம் கட்டியுள்ளார் என்றும் நான் பொய்யாக சொல்லி உள்ளேன் என்றாலும் அதனை நான் நிரூபிக்கவில்லை என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலம் சரியல்ல.